# யாப்பிலக்கணம் கற்பித்தல் தொழில்நுட்பம் அன்றும் இன்றும்

*முனைவர் க. மகேஸ்வரி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மேலாண்மையியல் புலம்
SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்
https://doi.org/10.5281/zenodo.15526539

***ஆய்வுச்சுருக்கம்***

*மொழியின் அமைப்பையும் பயன்பாட்டையும் உரைக்கும் பகுதி இலக்கணமாகும். தமிழ் இலக்கணம் தொன்மை உடையது. வளம் உடையது. நுட்பமுடையது. தமிழில் கிடைத்த முதல் நூல் தொல்காப்பியம். இது மூன்று இலக்கணம் கூறும் நூலாகும். இன்று கற்பிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வருகிறது. இவ்விலக்கணம் பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணமாக வளர்ச்சியுற்று இன்று கற்பிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வருகிறது. இவ்விலக்கணங்கள் இடைநிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி வகுப்புகளில் கற்பிக்கப்பட்டுவருகின்றன. இன்றைய நிலையில் கல்வியியல் நுட்பங்கள் இத்துறையில் வளர்ந்து வருகின்றன. தமிழ் இலக்கணங்கள் கற்பித்தலில் அன்றும் இன்றும் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மாணவர்களின் புரிந்துணர்வு திறன் மேம்படும். எனவே இன்றைய நிலையில் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் புதிய தொழில்நுட்பங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிற காரணத்தால் இவற்றை அறிந்துணர்வது அவசியம் என்கிற நிலையில் இக்கட்டுரை மேற்கொள்ளப் பட்டுள்ளது.*

**முன்னுரை**

*தமிழ் இலக்கணம் கற்பித்தலில் செய்யுள் இலக்கணம் கற்பித்தலும் ஒன்றாகும். இச்செய்யுள் இலக்கணம் கற்பித்தலை யாப்பிலக்கணம் கற்பித்தல் என்பர். யாப்பிலக்கணம் பள்ளிப்பாடம் முதல் கற்பிக்கப்படுகிறது. இதனை கற்கும் மாணவர்கள் பெரும்பான்மையோர் மனப்பாட முறையிலேயே கற்றுத் தேர்ச்சியடைகின்றனர். இதனால் தேர்வு முடிந்தவுடன் பலர் அப்பகுதியை மறந்தும் விடுகின்றனர். தேர்வுக்காகக் கற்கின்றனரே தவிர மொழியறிவை பெருக்கிக் கொள்ளும் நோக்கத்தில் கற்கவில்லை. இதற்கான முயற்சிகளும் கற்பித்தலில் பெரிதும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இக்கட்டுரை யாப்பிலக்கணம் கற்பித்தல் தொழில் நுட்பம் அன்றும் இன்றும் என்பது குறித்து ஆராய்கிறது.*

**யாப்பிலக்கணம் கற்பித்தல் தொழில் நுட்பம் அன்று**

*யாப்பிலக்கணம் அன்றும் இன்றும் யாப்பெருங்கலக்காரிகை அடிப்படையில் கற்பிக்கப்படுகிறது. யாப்பிலக்கணம் அன்றைய காலத்தில் விதிவிளக்க முறை அடிப்படையிலேயே கற்பிக்கப்பட்டது. செய்யுள் உறுப்புகள், செய்யுள் வகைகள், ஒழியியல் அடிப்படையில் கற்பிக்கப்பட்டன. நூற்பாக்களைக் காட்டி நூற்பாக்களுக்கு விளக்கம் தரும் அடிப்படையிலேயே கற்பிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக அசைக்கு உறுப்பாக வரும் 13 எழுத்துக்களைப் பற்றி கற்பிக்கும் பொழுது,*

> ***குறில்நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்த மெய்யே***
> ***மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்***
> ***சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்***

***அறிஞர் உரைத்த அளபும் அசைச்குப் பாவனவே***
***(யாப்பருங்கலக்காரிகை, நூ.4)***

*எழுத்து என்பது இசைக்கும் காரிகையாகும். அறிவை மயங்கச் செய்யும், சிறிய நெற்றியினையும், பெரிய போரினைச் செய்யும் கண்ணினையும், சிவந்த வாயினையும், நுண்ணிய இடையினையும் உடைய பெண்ணே குறில், நெடில், உயிர், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், மெய், குற்றமற்ற வல்லினம், மெல்லினம், இடையினம், குற்றந்தீர்ந்த உயிர்மெய், புலவரால் சொல்லப்பட்ட அளபெடை ஆகிய இப்பதின் மூன்று எழுத்தும் அசைக்கு உறுப்பாம் என்பது இதன் பொருள் என்று காரிகை குறிப்பிடுகின்றது.*

*பாக்களுக்குரிய அடியும் ஓசையும் குறித்துக் கற்பிக்கும் பொழுது இதே நிலைதான் பின்பற்றப்பட்டது. நூற்பாவும், நூற்பாவிற்குரிய விளக்கங்களும், எடுத்துக்காட்டுகளும், காண்டிகை, விருத்தியுரை வகைகளின் அடிப்படையில் கற்பிக்கப்பட்டன. மூலத்தையே உணர்ந்த நிலையில் விருத்தியுரையும் தடை, விடை உரைகளும், கற்பிக்கப்பட்டபொழுது மாணவர்களின் புரிந்துணர் திறன் குறைவு ஏற்பட்டு, மனப்பாடம் செய்வதனையே முக்கிய நோக்காகக் கொண்டு கற்றனர். எடுத்துக்காட்டாக பின்வரும் நூற்பாவை இந்நிலையிலேயே கற்றனர்.*

***வெண்பா வகவற் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்***
***ஒண்பா வடிகுறள் சிந்தென்றுரைப்ப வொலிமுறையே***
***திண்பா மலிசெப்பல் சீர்சா லகவற்சென் றோங்குதுள்ளல்***
***நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே***
***(யாப்பருங்கலக்காரிகை, நூ.22)***

*என்பது காரிகை, இவ்வியல் என்ன பெயர்த்தோ வெனின், வெண்பா, வெண்டாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம், ஆசிரியப்பா, ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், மருட்பா, எனக்கிடந்த செய்யுட்களை ஆமாறுணர்த் திற்றாதலாற் 'செய்யுளியல்'' என்னும் பெயர்த்து.*

***வெண்பா முதலா விளம்புநாற் பாவொலி***
***செப்ப லகவல் சீர்கெழு துள்ளல்***
***தூங்க லென்ப தென்னூற் புலவர்***
***(சு.சாமி ஐயா, யாப்பருங்கலக்காரிகை, ப.81)***

*என்றாகலின். இவ்வியலுள் இக்காரிகை என்னுதலிற்றோவெனின் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு பாவிற்கும் அடியும் ஓசையும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று (சண்முக.செல்வகணபதி, செ.கற்பகம் (ப.ஆ.), தொல்காப்பியம் செய்யுளியல், ப.22).*

## யாப்பிலக்கணம் கற்பித்தல் தொழில் நுட்பம் இன்று

*யாப்பிலக்கணம் கற்பித்தல் தொழில் நுட்பத்தில் இன்றைய நிலையில் எளிமையும், இனிமையும் கொண்ட கற்பித்தல் முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிந்தது கொண்டு அறியாத ஒன்றிற்குச் செல்லலும், புரிந்தது கொண்டு புரியாத ஒன்றிற்குச் செல்லலும், எளிமையிலிருந்து கடுமையான நிலைக்குச் செல்லலும், விளக்கங்கள் தந்து தெளிவுபடுத்தியபின் நூற்பாவை அறிமுகஞ் செய்தலும், விளக்கங்கள் புரிந்துணர் திறனை மேம்பட செய்தலும், நூற்பாக்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி புரிந்து மனப்பாடம் செய்யலும், இலக்கணத்தைப் பல்வேறு நிலைகளில் பயன்படுத்திக் கற்றுணரும் நிலையிலும், மாணவர்களின் வயது புரிந்துணர் திறனுக்கேற்ப படிப்படியாகக் கற்பிக்கும் தொழில் நுட்பங்கள் இன்று பெரிதாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகைகள் செய்யுள் உறுப்புகள் கற்றல், வெண்பா இலக்கணம் கற்றல், கற்பித்தல், ஆசிரியப்பா கலிப்பா இலக்கணங்களைக் கற்பிக்கும் நிலைகள் பின் கண்டவாறு கூறப்பட்டுள்ளன.*

## செய்யுள் உறுப்புகள்

***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு***

*இப்பாடல் குறள் வெண்பாவால் அமைந்த பாடலாகும். முதலடியில் நான்கு சீரும் இரண்டாவது அடியில் மூன்று சீரும் கொண்டுள்ளது. முதலடியில் நான்கு*

சொற்கள் உள. இதில் அகர ஒருசொல் முதல இரண்டாவது சொல் எழுத்தெல்லாம் மூன்றாவது சொல், யாப்பில் இச்சொல் வடிவத்தைச் சீர் என்று கூறுவர்.

சீர் பல அசைகளால் ஆனது. அகர என்ற சீரில் அக ர என்ற இரண்டு அசைகள் உள. முதல என்ற சீரில் முத ல என்ற இரு சீர்கள் உள. எழுத்தெல்லாம் என்ற சீரில் எழுத் தெல் லாம் என்ற மூன்றசைகள் உள. ஆதி என்ற சீரில் இரு அசைகள் உள. பகவன் என்ற சீரில் இரு அசைகள் உள, முதற்றே என்ற சீரில் இரண்டு அசைகள் உள. உலகு என்பது ஓரசைச்சீர். எனவே ஓரசையோ, ஒன்றுக்கு மேற்பட்ட அசையே சேர்ந்து வரும்போது சீர் என்கிற தன்மையைப் பெறுகிறது.

எழுத்துக்கள் அசைந்து இசைகோடல் அசையாகும். அகர என்ற சீரில் இரண்டசையும் மூன்று எழுத்துக்களும் உள. இசைகோடும் மரபிற்கேற்பஅசைகணக்கிடப்படுகிறது. அசை நேரசை நிரையசை என இரு வகையாகும். அகர என்ற சீரில் அக,ர என்ற இரு குறில் இணைந்த நிரையசையும் தனிக்குறில் வந்த நேரசையுமாக அமைத்து புளிமா என்னும் வாய்பாட்டைப் பெற்றுள்ளது.

தனி எழுத்தோ தொடர் எழுத்துக்களோ சேர்ந்து அசை என்ற வடிவத்தையும் தொடர் அசைகளோ (அ) தனியசையோ சேர்ந்து சீர் என்ற வடிவத்தையும் இரண்டு சீர்களை இணைத்துத் தளைக்கும் தளை என்ற வடிவத்தையும், நாற்சீர்களையோ, குறைந்த சீர்களையோ மிக்க சீர்களையோ கொண்டு அடி என்ற நிலையினையும், அடிகள் ஒன்றொடொன்று தொடுக்கப்படும் நிலையால் தொடை என்ற நிலையையும் யாப்புறுப்புகள் பெறுகின்றன.

யாப்பிலக்கணம் கற்பிக்கும் பொழுது, இவ்யாப்பு உறுப்புகளைப் பற்றி மாணவர்களுக்கு விதி வருமுறையின் மூலம் கற்பிக்க வேண்டும். பல்வேறு மேற்கோள்களை மாணவர் மூலம் தருவித்து அம்மேற்கோள்களில் உள்ள யாப்பு உறுப்புகள் இவை, இவை என்பதனை மாணவர்களை உணரச் செய்திடல் வேண்டும். பல்வேறு மலர்களை அழகுற தொடுக்கும் நிலையால் தனி மலர்கள் தொகுக்கப்பெற்ற பின் மாலையென பெயர் பெறுவதைப் போல யாப்பு உறுப்புகளின் அமைப்பு முறையால் செய்யுள் வடிவம் தோன்றுகிறது. மாணவர்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி பல்வேறு மேற்கோள்களைத் தருவித்து அட்டைகள் மூலமோ கற்பித்தல் துணைக் கருவிகள் மூலமோ இவற்றைக் காண்பித்து, உணரச் செய்து, பிறகு ஒவ்வொரு உறுப்பையும் கற்பிக்க வேண்டும்.

### பாக்களுக்குரிய அடியும் ஓசையும்

நால்வகைப் பாக்களாகிய வெண்பா, ஆசிரியம் கலி, வஞ்சி ஆகிய இவற்றிற்கு உரிய அடி வரையறை, ஓசை பற்றி முதற்கண் காரிகை ஆசிரியர் விளக்குகிறார் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பாவாகிய இம்மூன்றும் நாற்சீரடியினால் வரும். நாற்சீரடியை அளவடி என்பர். வஞ்சிப்பா இருசீர் அடியானும் முச்சீரடியானும் வரும். இருசீரடியைக் குறளடி என்றும், முச்சீரடியைச் சிந்தடி என்றும் சொல்வதுண்டு (சண்முக. செல்வகணபதி, செ.கற்பகம் (ப.ஆ.), தொல்காப்பியம் செய்யுளியல், ப.22).

**வெண்பாவின் ஓசை செப்பலோசை**
**அகவற்பாவிற்குரியது அகவலோசை**
**கலிப்பா துள்ளலோசையினால் வரும்**

வஞ்சிப்பாவின் ஓசை தூங்கலோசையாகும்.

### வெண்பாவின் வகைகளும் இனங்களும்

குறள்வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என வெண்பாவின் வகைகளும் வெண்செந்துறை, குறட்டாழிசை, வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என வெண்பாவின் இனங்களும் பற்றிக் காரிகை ஆசிரியர் கூறுகின்றார்.

மேற்கண்டவற்றுள் அடியளவினாற் பெயர் பெற்றவை குறள் வெண்பாவும், சிந்தியல் வெண்பாவும் ஆகும். ஓசையினால் பெயர்

*பெற்றவை நேரிசை வெண்பாவும், சிந்தியல் வெண்பாவும் ஆகும். தொடையாற் பெயர் பெற்றது பஃறொடை வெண்பா ஆகும்.*

**வெண்பா கற்பித்தல் தொழில் நுட்பம்**

*பாக்களுள் வெண்பாவும் ஒன்றாகும்.*

***இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்***
***வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்***
***கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம் குற்றம்***
***தரமல்லார் கையகத்து ஊண்***

***(நான்மணிக்கடிகை, பா.94)***

*இப்பாடல் நான்மணிக்கடிகையில் இடம் பெற்றுள்ளது. இது ஒரு வெண்பாவாகும். நான்கு அடிகளைக் கொண்டமையால் இதனை அளவியல் வெண்பா என்பர். முதல் மூன்றடிகள் நன்நான்கு சீர்களைக் கொண்டுள, ஈற்றடி முச்சீர்களைப் பெற்றுள்ளது. எனவே அளவியல் வெண்பா நான்கு சீர்களைக் கொண்டிருக்கும் என்றும் ஈற்றடி முச்சீர்களைக் கொண்டிருக்கும் என்றும் தெரிய வருகிறது. நான்கு அடிகளுக்கு குறைவாக வருவதனை சிந்தியல் வெண்பா என்றும், குறள் வெண்பா என்றும் வகைப்படுத்துவர். நான்கடியின் மிக்கு வருவதனை பஃறொடை வெண்பா என்பர்.*

*வெண்பா செப்பலோசை உடையதாக வருதல் வேண்டும் என்பர். செப்பலோசையாவது இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.*



*இவ்வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர்வெண்டளையும்வந்துள்ளமையால் செப்பலோசை பெற்றதாக உள்ளது. எனவே வெண்பா இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை தவிர ஏனைய தளைகள் வாரா என்பதும் பெறப்பட்டுள்ளது.*

*வெண்பாவின் ஈற்றடி முச்சீராக வரும். இவ்வகையில் இப்பாடலில்,*

***தமரல்லார் கையகத்து ஊண்***

***அளவியல் வெண்பாவில் நான்காமடி முச்சீராகவும் சிந்தியல் வெண்பாவில் மூன்றாமடி முச்சீராகவும் பஃறொடை வெண்பாவில் ஈற்றடி முச்சீராகவும் வரப்பெறும் என்ற இலக்கணத்தை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.***

***வாரிய பெண்ணை வருகுரும்மை வாய்த்தனபோ***
***லேரிய வாயினு மென்செய்வ - கூரிய***
***கோட்டியானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்***
***கோட்டு மணங் கொள்ளா முலை***

***(முத்தொள்ளாயிரம்)***

*இப்பாடலில் இரண்டாமடியில் தனிச்சொல் பெற்று வந்துள்ளது. இவ்வாறு தனிச்சொல் பெற்றுவரும் வெண்பாவை நேரிசை வெண்பா என்றும் தனிச்சொல் பெறாத வெண்பாவை இன்னிசை வெண்பா என்பர். இவ்வகையில் அளவியல் வெண்பா, சிந்தியல் வெண்பா, குறள் வெண்பா என்பன தனிச்சொல் பெற்றும் பெறாமலும் வரும் நிலையில் உள்ளன.*

***கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்***
***தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையான்***
***நள்ளாமை வேண்டுஞ் சிறியரோடு யார் மாட்டும்***
***கொள்ளாமை வேண்டும் பகை***

*இவ்வெண்பாவில் ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஓர் எழுத்தைப் பெற்றுள்ளது. கள்ளாமை, தள்ளாமை, நள்ளாமை, கொள்ளாமை இவ்வாறு வருவதனை ஒரு விகற்;ப வெண்பா என்பர். இரு எதுகைகள் பெற்று வருவதனை இருவிகற்ப வெண்பா என்பர்.*

*ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஓரசைச்சீராக இருக்கும் நேரசையாயின் நாள் என்ற வாய்பாட்டையும், நிரையசையாயின் மலர் என்ற வாய்பாட்டையும் நேரசையில் குற்றியலுகரம் பெற்றுவரின் காசு என்ற*

வாய்பாட்டையும், நிரையசையில் குற்றியலுகரம் பெற்றுவரின் பிறப்பு என்ற வாய்பாட்டையும் பெறும். மேலே காட்டப்பட்டுள்ள வெண்பாக்களில் ஊண் என்பது நேரசை நாள் என்ற வாய்பாடு பெற்றது. பகை என்பது நிரையசை மலர் என்னும் வாய்பாடு பெற்றது.

இவற்றையெல்லாம் தெளிவுபடுத்தியபின் விதிவருமுறையால் வெண்பாவின் இலக்கணம் கூறவேண்டும். வெண்பா செப்பலோசை உடையதாக வரும். நாற்சீரடி பெற்றுவரும். ஈற்றடி முச்சீராக வரும். இயற்சீர் வெண்டளையோ வெண்சீர் வெண்டளையோ பெற்று வரும் பிற தளைகள் வாராது நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகள் ஒன்றினால் முடியும் ஒரு விகற்பத்தாலோ, இருவிகற்பத்தாலோ வரும்.

நான்கு சீர்களின் மிக்குப்பல சீரால் வந்த அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருவனவும், வெண் செந்துறையில் சிதைந்து வருவனவும், செப்பலோசை சிதைத்து வரும் குறள்வெண்பாவைக் குறள் தாழிசை என்பர். மூன்றடியானும் முற்றுப் பெற்று அடிதோறும் இறுதியில் ஒரு சொல்லே தனிச் சொல்லாய் வருமாறு அமைவது வெளிவிருத்தம் ஆகும். இது மூன்றடியாகவன்றி நான்கடியாகவும் வரப்பெறும்.

மூன்றடியாய் அவற்றின் ஈற்றடி வெண்பாவே போல மூன்று சீராகக் கொண்டு முடியுமானால் அது வெண்டாழிசை யாகும். இதனை வொள்ளொத்தாழிசை என்றும் பெயரிட்டு வழங்குவர்.

மூன்றடிச் சிறுமையுடையதாய் ஏழடிப்பெருமையாய் இடையிடையே நான்கடியானும், ஐந்தடியானும், ஆறடியானும் வந்து, பின் சிலவடி சிலசீர் குறைந்து வருவன வெண்டுறையாகும்.

**பாட நூல்களில் யாப்பிலக்கணம்**

மேனிலைக்கல்வி முதலாமாண்டு, இரண்டாமாண்டு பொதுத் தமிழில் யாப்பிலக்கணங்கள் இடம் பெறவில்லை.

மேனிலைக்கல்வி முதலாமாண்டு சிறப்புத் தமிழில் யாப்பு உறுப்புகள், பாவகைகளில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா இலக்கணங்கள் இடம் பெற்றுள்ளன.

மேனிலைக்கல்வி இரண்டாமாண்டு சிறப்புத் தமிழில் கலிப்பாவின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

**மேனிலைக் கல்வி**

மேனிலைக் கல்வி பொதுத்தமிழ் முதலாமாண்டு, இரண்டாமாண்டு பாட நூற்களில் யாப்பு இலக்கணம் இடம் பெறவில்லை. மேல்நிலைக்கல்வி முதலாண்டு சிறப்புத் தமிழில் நால்வகைப் பாக்கள், யாப்பு உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியனவும், ஆசிரியப்பாவின் பொது இலக்கணம், ஆசிரியப்பாவின் வகைகள், கலிப்பாவின் இலக்கணம், கலிப்பாவின் உறுப்புகள் ஆகிய 10 பகுதிகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மேனிலைக் கல்வி இரண்டாமாண்டு சிறப்புத் தமிழில் வஞ்சிப்பா இலக்கணம் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

**வஞ்சிப்பா**

வஞ்சிப்பாவிற்குரியச் சிறப்புச் சீராக, கனிச்சீராகும். கனிச்சீர் நான்காகும். அவை, தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி என்பர். இவற்றோடு நிரையசையை ஈற்றிலே கொண்ட நாலசைச் சீர்களும் வரப்பெறும்.

ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சி த்தளை என்பன வஞ்சிப்பாவிற்குரிய தளைகளாகும். கனிச்சீர்களின் முன் நிரையில் தொடங்கும் சீர்வந்தால் ஒன்றிய வஞ்சித் தளையாகும். நேரசைவரின் ஒன்றா வஞ்சித் தளையாகும்.

வஞ்சிப்பாவிற்குரிய ஓசை தூங்கலோசை எனப்படும். அடிவரையறையிலும் வஞ்சிப்பா மூன்றடிகளைச் சிற்றெல்லையாக உடையது. இரண்டடிகளாலும் வரலாம் எனக்

கூறப்படுகிறது. பேரெல்லைக்கு வரையறை இல்லை பாடுவோர் கருத்திற்கு ஏற்ப பல அடிகளைக் கொண்டு முடியும்.

குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என இருவகையின் வரும்.

வஞ்சிப்பாவின் இனங்கள் மூன்று வகைப்படும். 1. வஞ்சித் தாழிசை, 2. வஞ்சித் துறை 3, வஞ்சி விருத்தம் என்ற மூன்று இனங்களை உடையது (தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், மேனிலைக் கல்வி இரண்டாமாண்டு தமிழ்ப் பாடநூல், பக்.238-239).

தமிழ் பாடநூற்களில் யாப்பிலக்கணங்கள் மாணவர்களின் புரிந்துணர் திறனுக்கேற்ப யாப்பு இலக்கண அறிமுகத்திலிருந்து பாவகைகள் வரை 8 ஆம் வகுப்பில் இருந்து 12 ஆம் வகுப்பு வரை விளக்கப்பட்டுள்ளன.

இன்றைய இடைநிலைக்கல்வி, மேனிலைக் கல்வி தமிழ்ப் பாடநூல்களில் யாப்பிலக்கணம் இடம் பெற்றுள்ளது. 6, 7 ஆம் வகுப்புகளில் இடம்பெறவில்லை. 8 வகுப்பு முதல் மேனிலைக் கல்வி இரண்டாம் ஆண்டுவரை உள்ள பாடநூல்களில் இடம் பெற்றுள்ளன. மாணவர்களின் அறிதிறனை மையமிட்டு இவ்வகுப்புகளில் இடம்பெறவில்லை. எட்டாம் வகுப்பில் யாப்பு, அணி இலக்கணங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆசிரியர் மாணவர் உரையாடும் நிலையில் இவை இடம் பெற்றுள்ளன.

ஒன்பதாம் வகுப்பில் செய்யுள் உறுப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவையும் விதி வருமுறையில் கூறப்பட்டுள்ளன. இவை போல் நால்வகைப் பாக்களின் இலக்கணம் எளிமையான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதே நிலை 9, 10 ஆம் வகுப்பு மேனிநிலைப் பள்ளி வகுப்புகளிலும் பின்பற்றப்பட்டுள்ளன.

**முடிவுரை**

யாப்பிலக்கணங்களாகிய யாப்புஉறுப்புகள், செய்யுள் வகைகள், பாவினங்கள், எளிமையான முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அன்றைய யாப்பிலக்கணம் கற்பித்தல் தொழில் நுட்பத்தில் விதிவிளக்க முறையே பின்பற்றப்பட்டுள்ளது.

நூற்பா, பொழிப்புரை, மேற்கோள், காண்டிகை உரை, விருத்தியுரை விவாத முறைகள் மூலம் கற்பிக்கப்பட்டுள்ளன.

மாணவருடைய புரிந்துணர் திறனை மையமிடாமல் பாடப் பொருளில் அழுத்தமும், ஆழமும் கொண்ட நிலையில் மையமிட்டுள்ளன. இதனால் கற்றல் மேம்படவில்லை.

மாணவர்களிடைய புரிந்துணர் திறனை மையமிட்ட கற்பித்தல் முறை யாப்பிலக்கணம் கற்பித்தலில் இன்று மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

யாப்பிலக்கணம் கற்பிக்கும் பொழுது அவர்கள் அறிந்த பாடல்கள் வாயிலாக எளிமையிலிருந்து கடுமைக்குச் செல்லல், படிப்படியாகச் செல்லல் போன்ற கல்வி உளவியல் திறங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

உரையாடல் முறை எளிமையிலிருந்து கடுமைக்குச் செல்லல், படிப்படியாக வளர்த்துச் செல்லல், மாணவர்களுக்கு ஆர்வமூட்டி கற்பித்தல் போன்ற கற்பித்தல் தொழில் நுட்பங்கள் இன்று பின்பற்றப்பட்டு யாப்பிலக்கணங்கள் எளிமையும், இனிமையும் கொண்ட கற்பித்தலாக மறுமலர்ச்சி பெற்றுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிட், திருநெல்வேலி, சென்னை, 1953.
2. சாமிஜயா, டாக்டர் சு., யாப்பருங்கலக் காரிகை, பாடநூண் பதிப்பு, முதற்பதிப்பு, 1990.
3. செல்வகணபதி, முனைவர் சண்முக., தொல்காப்பியம் எழுத்ததிகாரம், (முதுகலைப் பாடநூல், தொலைநிலைக் கல்வி), பாரதிதாசன் பல்கலைக்கழகம், 2008.
4. செல்வகணபதி, முனைவர் சண்முக., கற்பகம், முனைவர் செ., தொல்காப்பியம் செய்யுளியல், திருத்தவத்துறைத் தமிழ்ச்

சங்கம், இலால்குடி, முதற்பதிப்பு, மார்ச்சு 2012.
5. சேனாவரையர் (உ.ஆ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 2001.
6. தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், மேல்நிலை இரண்டாம் ஆண்டு, பகுதி I பொதுத்தமிழ், பள்ளிக்கல்வித்துறை, சென்னை, மறுபதிப்பு, 2009.
7. தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், மேல்நிலை முதலாம் ஆண்டு, சிறப்புத் தமிழ் பகுதி III, பள்ளிக்கல்வித்துறை, சென்னை, மறுபதிப்பு, 2008.
8. தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், மேல்நிலை முதலாம் ஆண்டு, பொதுத் தமிழ் பகுதி ஐ, பள்ளிக்கல்வித்துறை, செ ன்னை, மறுபதிப்பு, 2011.
9. தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், மேல்நிலை முதலாம் ஆண்டு, சிறப்புத் தமிழ் பகுதி ஐஐஐ, பள்ளிக்கல்வித்துறை, சென்னை, மறுபதிப்பு, 2006.
10. பாலசுந்தரம், ச. பாவலரேறு (உ.ஆ.), தொல்காப்பியம், தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1989.